# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(303) நிதிக்கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் வினாத்தாளானது 09 கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளதுடன் இவ் வினாப்பத்திரமானது 03 பகுதிகளைக் கொண்டுள்ளது. **பகுதி (அ)** தலா 05 புள்ளிகளைக் கொண்ட நான்கு கட்டாய வினாக்களைக் கொண்டிருப்பதுடன் **பகுதி (ஆ)** தலா 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று கட்டாய வினாக்களையும் **பகுதி (இ)** தலா 25 புள்ளிகளைக் கொண்ட இரண்டு கட்டாய வினாக்களையும் கொண்டுள்ளது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க முயற்சித்துள்ளனர். இருந்த போதும் சில வினாக்கள் மற்றும் சில பகுதிகளுக்கு விடையளிக்கப்படவில்லை. இதற்கு நேரமுகாமைத்துவமின்மை, பாடத்திட்டத்தின் குறித்த பாடம் தொடர்பாக காணப்படுகின்ற குறைவான அறிவு மற்றும் வினாக்களில் வினாவப்பட்ட விடயங்களை சரியாக விளங்கிக்கொள்ளாமை என்பன காரணங்களாகும்.

## <u>பகுதி (A)</u>

**வினா இல 01**

**வினாவின் பகுதி (அ)** ஆனது செயலாளரால் தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா என்பதாகும்.

பரீட்சார்த்திகள் தவறுதலாக இக்கூற்றுடன் உடன்படுவதாக தெரிவித்து குறைந்தளவிலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இதற்கான காரணம் பரீட்சார்த்திகளின் மேற்பார்வையாளர் கோட்பாடு, முகவராண்மை கோட்பாடு என்பவற்றின் குறைந்த அளவிலான அறிவே காரணமாகும். கற்றல் வழிகாட்டியானது இதனை பின்வருமாறு தெளிவாக முன்வைக்கின்றது.

- இயக்குனர்களே கம்பனியின் மேற்பார்வையாளர் ஆவார்.
- இயக்குனர்கள் கம்பனியின் பங்குதாரர்களால் நியமனம் செய்யப்பட்ட முதன்மையான ஊழியர்கள் ஆவர். இயக்குனர்கள் கம்பனியின் பங்குதாரரின் சார்பில் செயற்படல் வேண்டும்.

எனவே மாணவர்கள் கற்றல் வழிகாட்டியின் மீது போதுமான கவனம் எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

**வினாவின் பகுதி (ஆ)** ஆனது நம்பிக்கை உறவு கோட்பாட்டினை விளக்குமாறு வலியுறுத்தப்படுகின்றது. பரீட்சார்த்திகளின் செயல்திறன் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. நம்பிக்கை உறவு முறையானது தனியொரு நபர் ஏனைய நபர்களின் பணியினையும் கவனிக்க வேண்டுமென கற்றல் வழிகாட்டியானது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பரீட்சார்த்திகள் பின்வரும் பகுதியின் மீது முறையான அறிவினைப் பெற்றுக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

- முகவராண்மை கோட்பாடு

- மேற்பார்வையாளர் கோட்பாடு / செயன்முறைமை கோட்பாடு
- நம்பிக்கை உறவு கோட்பாடு
- முகவராண்மை முரண்பாடு / மோதல்
- கணக்காய்வு அடிப்படை மேற்பார்வை முறை வகிபாகத்திற்கான பொறிமுறையொன்றினை எவ்வாறு வழங்குகிறது என்பதனை உறுதிப்படுத்தல்.

**வினா இல 02**

வினாவானது கம்பனியொன்றின் இடரினை இனங்காணல் மற்றும் அதனை கட்டுப்படுவதற்கான சரியான நுட்பமுறையினை அடையாளம் காணுதல் தொடர்பானது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இடரின் வகையினை முறையாக இனங்கண்டிருந்தாலும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான நுட்பத்தினை வெளிப்படுத்த தவறியிருந்தனர்.

விடையானது நிறுவனப் பார்வையில் வணிகச் செயற்பாடு தொடர்பான புரிதலை வழங்க வேண்டும்.

பரீட்சார்த்திகளால் முன்வைக்கப்பட்ட சில தவறான விடைகள் பின்வருமாறு

- பிழையான தகவல்களை முன்வைத்தல் - நிதி இடர்
- நுகர்வோர் உற்பத்தி பொருட்களை நிராகரித்தல் - செயற்பாட்டு இடர்
- வட்டி வீதம் அதிகரித்தல் - நிதி இடர்

பரீட்சார்த்திகளால் பின்வரும் பகுதிகள் தொடர்பாக அறிவினை வளர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

- நிறுவனமொன்றின் உள்ளக மற்றும் வெளியக இடர்கள்
- இடர் முகாமைத்துவ கட்டமைப்பு
- இடரை தனிப்பதற்கான நுட்பங்கள் பயன்படுத்துகின்ற முறை
- இடர் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்

**வினா இல 03**

இவ்வினாவானது முத்தரப்பு உறவு முறையானது உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றின் ஐந்து மூலங்களில் ஒன்று என்பதன் வகிபாகத்தையும் ஒவ்வொருக்குமான கடமைகளை உறுதிப்படுத்துமாறு வேண்டப்படுகிறீர்.

இவ்வினாவிற்கான பரீட்சார்த்திகளின் செயற்றிறன் மிகவும் குறைவாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ் வினாவிற்கான தேவைப்பாடு என்ன என்பதை தெளிவாகப் புரிந்துக்கொள்ளவில்லை.

இவ் வினாவில் இரண்டு தேவைப்பாடுகள் வேண்டப்படுகின்றன.

- முத்தரப்பு கணக்காய்வு பிரவேசத்திற்கான கூறுகளின் வகிபாகத்தை விளக்குக.
- அவர்கள் எவ்வாறு ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்கின்றனர். என்பதை விளக்கவும்.

பரீட்சார்த்திகள் மூன்றாம் கட்சி உறவுகள் தொடர்பாக கோரப்பட்டதற்கமைய பொருத்தமான விடையை எழுதாமல் தமக்கு தெரிந்தவற்றை எழுதியிருந்தார்கள்.

எனினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணக்காய்வு பிரவேசத்திற்கான மூன்றாம் கட்சியினர் பற்றி அறிந்திருந்த போதிலும் அவர்கள் எவ்வாறு ஏனையோருடன் தொடர்புபடுகின்றனர் என்பதை உரியவாறு வெளிப்படுத்தவில்லை.

எனவே பரீட்சார்த்திகள் வினாவில் கோரப்பட்டுள்ள விடயங்களை முறையாக புரிந்துக்கொள்ள அறிவுத்தப்படுவதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பில் அறிவினை வளர்த்துக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

- உறுதிப்பகுப்பாய்வு மற்றும் மதிப்பிடத்தக்க உறுதிப்பாட்டுக்கும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு பிரசேத்திற்குமிடையேயான வேறுபாடும்
- உறுதிப் பிரவேசத்தின் கூறுகள்
- உறுதிப் பிரவேசத்தினை ஏற்கும் போது முகாமை செய்வதற்கான தேவைகள்
- தொடர்புடைய சேவைகள்

**வினா இல 04**

இவ் வினாவானது நிறுவனமட்டத்தில் தரக்கட்டுப்பாட்டினையும் தனிப்பட்ட கணக்காய்வினையும் கொண்டுள்ளது.

மிகவும் குறைவான செயற்றிறன்

பெரும்பாலான பரீட்சார்த்திகள் நிறுவனமட்டத்தில் தரக்கட்டுப்பாடு மற்றும் தனிப்பட்ட கணக்காய்வு தொடர்பில் எந்தவிதமான புரிதலையும் கொண்டிருக்கவில்லை. வினாவை முறையாக புரிந்துக்கொள்ளாமல் பொதுவான தலைமைத்துவ அறிவு, பொறுப்புக்கூறல் மற்றும் மேற்பார்வை தொடர்பான விடைகளை வழங்கிருந்தனர். இது கற்றல் வழிகாட்டியிலும் (Study text) உள்ளடக்கப்பட்டுள்ளது.

தலைமைத்துவ பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் பொருத்தமற்ற விடைகள் வழங்கப்பட்டுள்ளன.

- மேற்பார்வை செய்தல்
- கட்டுப்படுத்துதல்
- தொடர்புசெய்தல்
- ஊக்கப்படுத்துதல்

பரீட்சார்த்திகள் பின்வரும் விடயங்களில் அறிவினை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

- தரக்கட்டுப்பாட்டு முறையின் குறிக்கோள்கள்
- தரக்கட்டுப்பாட்டு முறையின் கூறுகள்
- நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கு தரக்கட்டுப்பாட்டு முறைகள்
- கணக்காய்வு பிரவேசம் தொடர்பான வாடிக்கையாளருடனான ஏற்பும் தொடர்ந்து கொண்டு செல்லலும்

## <u>பகுதி (B)</u>

**வினா இல 05**

**வினாவின் (அ)** பகுதியானது கணக்காய்வாளரொருவரால் கணக்காய்வினை திட்டமிடும் பொழுது பெற்றுக்கொள்ளும் மூன்று அனுகூலங்கள் தொடர்பானது.

பரீட்சார்த்திகளின் செயற்றிறனானது சாதாரண மட்டமாகும்.

பரீட்சார்த்திகள் பின்வரும் பொதுவான விடைகளை தந்திருந்தனர்.

- கணக்காய்வின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை அதிகரித்தல்.
- கிரய கட்டுப்பாடு
- வாடிக்கையாளரின் வியாபார செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்தல்.

**பகுதி (ஆ)** கணக்காய்வாளர் **ஸ்டார் லங்கா தனியார் நிறுவனத்தின்** மூன்று துறைகள் தொடர்பான புரிதலை வெளிப்படுத்துதல்.

இவ்வினா மிகவும் இலகுவானது வாடிக்கையாளர் நிறுவனம் தொடர்பினை கணக்காய்வாளரின் புரிதல் தொடர்பில் கற்றல் வழிகாட்டியிலும் பெரும்பாலான பகுதிகள் தரப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளின் செயற்றிறனானது சாதாரண மட்டமாகும்.

பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- கொடுப்பனவு செயன்முறை
- விநியோக செயன்முறை
- இருப்பு அறிக்கை
- வங்கிக்கூற்று

**பகுதி (இ)** கணக்காய்விற்கு தயாராகும் கணக்காளரால் முன்கூட்டியே தயார் செய்யப்படுகின்ற செயற்பாடுகள் (பூர்வாங்கச் செயற்பாடுகள்) தொடர்பானது.

பரீட்சார்த்திகளின் செயற்றிறனானது மிகக் குறைந்த மட்டமாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ் வினாவிற்கான தேவைப்பாடு என்ன என்பதை தெளிவாகப் புரிந்துக்கொள்ளாமல் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- கடந்தகால கணக்காய்வு அறிக்கைகள் மீள் பரிசீலனை செய்தல்.
- உள்ளக கட்டுப்பாட்டு முறையை பரீட்சித்தல்.
- அக்கறையுடைய கட்சியினரின் கொடுக்கல் வாங்கல்களை பரீட்சித்தல்.

தற்போதைய கணக்காய்வு பிரவேசம் தொடர்பில் முன்கூட்டிய பிரவேசம் தொடர்பான செயற்பாடுகள் எனும் சொற்பதத்தினை தவறவிட்டிருந்தனர்.

**வினா இல 06**

**பகுதி (அ)** ஆனது நிறுவனமொன்றின் மோசடிகளை இனங்காணல் மற்றும் தவித்தல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பினை வலியுறுத்துகிறது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பின்வரும் முக்கிய புள்ளியினை தவறவிட்டிருந்தனர்.

- மோசடிகளை கண்டறிதலும் கட்டுப்படுத்தலும் ஆளுகையுடன் சம்பந்தப்பட்டவர்களின் முதன்மை பொறுப்பாகும்.

உள்ளக கட்டுப்பாடுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் சில தவறுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் கண்டறியாமல் போகக்கூடும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் மோசடிகளை கண்டறிதலும் கட்டுப்படுத்தலும் கணக்காய்வாளரின் பொறுப்பு என ஆரம்பித்திருந்தனர்.

**பகுதி (ஆ)** மோசடிகள் தொடர்பாக கண்காய்வு ஆபத்தை எவ்வாறு கணக்காய்வாளரால் அடையாளம் காண்பதென்ற நடைமுறை தொடர்பானதாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயற்பாடு திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.

எனினும் கணிசமான பரீட்சார்த்திகள் பின்வரும் பொதுவான கணக்காய்வு நடைமுறையினை குறிப்பிட்டிருந்தனர்.

- ஆய்வு மேற்பார்வை விசாரணை

சிலர் முற்றிலும் தொடர்புபடாத பின்வரும் விடைகளை வழங்கியிருந்தனர்.

- CCTV நிறுவுதல்.
- பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள்

ஒதுக்கப்பட்ட முழுமையான புள்ளிகளை பெற்றுக்கொள்ள பின்வரும் நடைமுறைகளை வெளிப்படுத்துதல் வேண்டும்.

- மோசடி காரணமாக நிதிக்கூற்றுக்களில் எழக்கூடிய இடர்களை அடையாளங்காணுதல்.
- அடையாளங்காணப்பட்ட மோசடிகள் தொடர்பாக சரியானதும் போதுமானதுமான கணக்காய்வு ஆதாரங்களைப் பெறல்.
- கணக்காய்வின் போது அடையாளங்காணப்பட்ட அல்லது இனங்காணப்பட்ட மோசடிகள் தொடர்பாக சரியான முறையில் பின்னூட்டல் அல்லது பதில் வழங்கல்.

**பகுதி (இ)** கணக்காய்வு மேற்கொள்ளும் பகுதிகள் சார்பாக தொடர்புகளை ஏற்படுத்தல்.

பரீட்சார்த்திகளின் செயற்றிறனானது திருப்திகரமான மட்டத்தில் இல்லை.

இந்தப் பகுதிக்கான விடைகள் கற்றல் வழிகாட்டியில் மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- நிறுவனத்தை அறிந்துக்கொள்ளல்.
- நிதி அறிக்கைக்கான கட்டமைப்பு
- கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்புக்கள்
- கணக்கீட்டு நியமங்கள்

## வினா இல 07

**பகுதி (அ)** ரிலயபல் பொதுக்கம்பனியின் கணக்காய்வு பிரவேசம் தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை கலந்துரையாடல்.

இது மிகவும் இலகுவான வினாவாகும். காரணம் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் மற்றும் தொடர்புகள் குறித்த வினாவிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ் வினாவிற்கான தேவைப்பாடு என்ன என்பதை தெளிவாகப் புரிந்துக்கொள்ளாமலும் வினாவினை முழுமையாக வாசித்து விளங்கிக்கொள்ளமலும் விடையளித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் முறையாக வினாவினை வாசித்திருந்தால் பெரிய முயற்சிகள் எடுக்காமல் முழுமையான புள்ளியினை பெற்றிருக்க முடியும்.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- நெறியியல் தேவைப்பாடுகள்.
- கணக்காய்வு திட்டமிடலும் செயற்படுத்தலும்.
- கணக்காய்வினை தரவுப்படுத்தல்.

**பகுதி (ஆ)** புதிய கணக்காய்வு வாடிக்கையாளர் ஒருவரை ஏற்றுக்கொள்ளும் போது கணக்காய்வாளரின் தொழில்முறை தொடர்பான தேர்ச்சி, அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கலந்துரையாடுதல்.

நேரடியான விடைகள் தரப்பட்டிருக்கலாம். இவை கற்றல் வழிகாட்டியில் ஏற்கனவே தரப்பட்டுள்ளது.

செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- முன்னைய ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கைகளை மீள்பரிசீலித்தல்.
- முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுதல்.
- முகாமை பங்குபற்றலை பெற்றுக்கொள்ளல்.

## பகுதி (C)

**வினா இல 08**

(a) இவ்வினாவானது **வரையறுக்கப்பட்ட ஒசு மெதுர தனியார் நிறுவனத்தின்** உள்ளக கட்டுப்பாட்டு முறையின் நான்கு பலவீனங்களை இனங்காணுமாறு வேண்டப்பட்டது. வினாவிற்கான விடையினை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ் வினாவினை முயற்சித்துள்ளதோடு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் இரண்டிற்கும் மேற்பட்ட புள்ளிகளை பெற்றுள்ளனர். கற்றல் வழிகாட்டியானது நிறுவனமொன்றின் உள்ளக கட்டுப்பாட்டு முறையினை குறிப்பிட்டுள்ளதுடன் அது நிலையான தன்மை மற்றும் அளவுடன் தொடர்புபடாது எனவும் வலியுறுத்துகிறது.

பின்வருவன உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் சில குறைபாடுகள் ஆகும்.

(1) **திரு. ரொசான்** ஒரு மருத்துவ உத்தியோகஸ்தராக இருந்துக்கொண்டு கணக்காளராக பணியாற்றியுள்ளார்.

(2) **கல்பனி** ஒரு மருந்தக சேவையாளர் எனினும் இவர் கணக்கீட்டு பணிகளை ஆற்றியுள்ளனர்.

(3) **திரு. ரொசான்** கணணியின் மீதிகளை அடிப்படையாக கொண்டு மருத்தக பொருட்களுக்கு கட்டளையிட்டுள்ளார்.

(4) கொள்வனவு கட்டளை, பொருள் வேண்டுதல் பத்திரம் என்பவற்றை கருத்திற் கொள்ளாது வழங்குனரின் கைச்சாத்தினை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

(5) காசு வைப்பிலிடும் இயந்திரம் (CDM) ஆனது தாள் நாணயங்களை மட்டுமே பெற்றுகொள்ளும். எனின் வேறாக வைக்கப்பட்டிருந்த நாணய குற்றிகள் வங்கியில் வைப்பிலிடப்படவில்லை. ஆகவே "அனைத்து வருமானங்களும் வைப்பிலிடப்பட்டது." எனும் நிறுவன கொள்கை இங்கு மீறப்பட்டுள்ளது.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- கடன் விற்பனை இடம்பெறவில்லை
- நிதித்திணைக்களம் காணப்படாமை.
- கொள்வனவு விற்பனையினை மகரகம கிளை மாத்திரம் மேற்கொள்ளல்.

(b) இவ்வினாவின் ஒரு பகுதியானது ''உள்ளக கட்டுப்பாட்டு முறையின்'' விளக்குமாறு பரீட்சார்த்திகளிடம் கோரியிருந்தது. எனினும் பொரும்பாலான பரீட்சார்த்திகள் பொதுவான விடையை அவர்களின் சொந்த மொழிநடையில் தந்திருந்தனர். AAT பாடத்திட்டத்தில் உள்ளக கட்டுப்பாட்டு முறை மற்றும் வணிக செயன்முறைக்கு 25% ஒதுக்கியிருக்கிறது. பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறை என்றால் என்னவென்றே தெரியவில்லை. கற்றல் வழிகாட்டியானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறை என்றால் என்ன என்பதை மிகவும் தெளிவாக விளக்குகிறது.

எனினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் கற்றல் வழிகாட்டியில் காணப்படும் இவ் அலகின் மீது உரிய கவனம் செலுத்தி கற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

(C) வினாவின் இப்பகுதியானது சூழல் கட்டுப்பாட்டின் ஐந்துக் கூறுகளை வெளிப்படுத்துமாறு கேட்கப்பட்டிருந்தது. செயற்றிறன் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் கூறுகள் தொடர்பில் தெளிவற்று காணப்பட்டன. எனினும் சூழல் கட்டுப்பாடு என்பது உள்ளகக் கட்டுப்பாடு முறையின் ஒருக்கூறு ஆகும்.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- ஊழியர் கட்டுப்பாடு
- கூட்டிணைப்பு ஆளுகை
- வணிக செயன்முறை மற்றும் நடைமுறை

(d) வினாவின் இப்பகுதியானது வரையறுக்கப்பட்ட ஒசு மெதுர தனியார் நிறுவனத்தின் மூன்று வழி செயன்முறையினை விளக்குமாறு கேட்கப்படுகிறது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் செயல்திறன் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வணிகச் செயன்முறையினை விளக்கமாக விளக்காததன் காரணமாக குறைந்த புள்ளிகளை பெற்றுள்ளனர். இவ்வினா இலகுவாக இருந்தும் சிலர் இத்தலைப்பின் அடிப்படையினை கூட தெரிந்திருக்கவில்லை.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- உற்பத்தி செய்தல் செயன்முறை
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயன்முறை
- நிர்வாக செயன்முறை

(e) இவ்வினாவின் இப்பகுதியானது **ஒசு மெதுர நிறுவனத்தின்** மூன்று விண்ணப்ப கட்டுப்பாட்டு முறையான உதாரணத்துடன் தருமாறு வேண்டப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் செயல்திறன் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. ஒரு சில பரீட்சார்த்திகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உதாரணத்தை வழங்கியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- கணணி மயப்படுத்தப்பட்டமையுடன் இணைந்த இடர்கள்
- தகவல்கள் தொழில்நுட்ப விண்ணப்பக் கட்டுப்பாடுகள் உதாரணத்துடன்
- தகவல்கள் தொழில்நுட்ப கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்

**வினா இல 09**

(a) வினாவின் இப்பகுதியானது வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கணக்காய்வுச் சான்றுகளைத் தவிர மூன்று கணக்காய்வு நடைமுறைகளை விளக்குமாறு வினாவப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயற்றிறன் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் ''வெளியக உறுதிப்படுத்தலுக்கான அழைப்பு'' என்பதனை மீள வலியுறுத்தப்படுத்தியிருந்தனர். இது பாடத்திட்டத்தினை புரிந்துக்கொள்வதில் காணப்பட்ட குறைந்த அறிவு மட்டம் பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணக்காய்வு நடைமுறைகளை கூறியுள்ளதுடன் அதனை முறையாக விளங்கப்படுத்தவில்லை.

(b) வினாவின் இப்பகுதியானது எதிர்மறை உறுதிப்படுத்தலுக்கான கோரிக்கை என்பதனை விளக்குமாறு கூறியிருந்தது. எனினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் எதிர்மறை உறுதிப்படுத்தல் என்பதை விட வெளியக உறுதிப்படுத்தலை விளக்கியிருந்தனர். பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட பொருத்தமற்ற விடைகள் உறுதிப்படுத்தலுக்கான விளக்கமான தகவல்கள் இன்றி தனது பொறுப்பை தீர்க்க முடியாத போதே உறுதிப்படுத்தல் வழங்கப்படல் வேண்டும்.

(c) வினாவின் இப்பகுதியானது TPLC யின் நிதித் தகவல்களை ஒப்பிடுவதற்கான கணக்காய்வாளர் முன்கொண்டு செல்லக்கூடிய இரண்டு பகுப்பாய்வு முறைகளை இனங்காணுமாறு வேண்டப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் செயன்முறை கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர். தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு பகுப்பாய்வு, கட்டுப்பாட்டு சோதனை, கணிசமான நடைமுறைகள்

(d) வினாவின் இப்பகுதியானது தொடர்ந்தியங்குதல் நிபந்தனையின் சந்தேகத்தை உருவாக்கும் ஐந்து நிகழ்ச்சிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாகக் கோரப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயற்றிறன் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. வினாவில் வழங்கப்பட்ட அனேகமான தகவல்கள் தொடர்ந்தியங்கும் நிபந்தனையில் வழங்கியிருந்தது. கற்றல் வழிகாட்டியும் தொடர்ந்தியங்குதல் நிபந்தனையினை வழங்கியிருந்தது.

(e) வினாவின் இப்பகுதியானது கம்பனியொன்றினால் கோரப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளத்தக்க வலியுறுத்தல் சம்பந்தமான தேவைகள் வினாவப்பட்டது. வினாவைப் புரிந்துக்கொள்ளாமல் பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடைகளை வழங்கியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயற்றிறன் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. கணக்காய்வாளர் விரும்பின் நிறுவனம் தொடர்ந்தியங்குதல் எண்ணக்கருவின் படி வலியுறுத்தப்பட்ட விடயங்களை பின்பற்ற முடியும் என்பது தவறாகும். ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டும் குறித்த கருத்தானது தகுதிப் பெறவேண்டும் என வலியுறுத்தினர்.

(f) வினாவின் இப்பகுதியானது TPLC யின் நிதி நிலைமை அபிப்பிராயம் தொடர்பில் தகைமைப் பெற்ற கருத்தொன்றை வழங்குவதன் பொருத்தப்பாட்டு தன்மை அல்லது பொருத்தமற்ற தன்மையை விபரிக்குமாறு வேண்டியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளில் சில பரீட்சார்த்திகள் மாத்திரம் முயற்சித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தகுதிப் பெற்ற அபிப்பிராயத்தை முன்வைக்க முடியும் எனக் கூறியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறான அறிக்கைகளின் தாக்கத்தை கருத்திற்கொண்டுள்ளனர். எனவே சில பரீட்சார்த்திகள் மாத்திரம் மாற்றி அமைக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்மறையினை கருத்து வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

பரீட்சார்த்திகள் பின்வரும் பகுதி தொடர்பில் அறிவினை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்.

- தொடர்ந்தியங்குதல் தொடர்பான நிதி மற்றும் செயற்பாட்டுக் குறிகாட்டிகள்
- தொடர்ந்தியங்கும் முகாமையின் பொறுப்புக்கள்

சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமற்ற விடைகளை தந்திருந்தனர்.

- தொடர்ந்தியங்களிலான கணக்காய்வு நடைமுறை.
- கணக்காய்வாளர் அறிக்கை (மிகவும் கட்டாயம்).
- ஆளுகையுடன் இணைந்த அறவிடப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளல்.

**தேர்வு நாடிகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்**

1. பாடநூலை கவனமாக வாசித்து அதில் வழங்கப்பட்டுள்ள பகுதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும்
2. இப்பாடத்துடன் தொடர்புடைய நூல்கள் கையேடுகள் மடல்கள் நாட்குறிப்புகளை வாசிக்கவும்
3. செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதோடு அச்செயல் வினைச் சொற்களுக்கு அமைவாக கேள்விகளுக்கு விடை அளிக்க பயிற்சி செய்தல்
4. குறைந்தது கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கான கடந்த கால வினாக்களை பயிற்சி செய்வதோடு எவ்வாறு கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளல்
5. கேள்வியில் வழங்கப்பட்டுள்ள கருத்தியல்களையும் அவற்றின் பிரயோகங்களையும் புரிந்து கொள்ளல்
6. கடந்த கால வினாத்தாள்களில் பரிட்சிக்கப்பட்ட பாடநூலில் காணப்படும் பகுதிகளில் சிறு குறிப்புகளை எடுத்து அவற்றை தெளிவாக விளங்கிக் கொள்ளல்
7. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலுடன் விடை அளித்து பழகல்
8. பாடநூலில் காணப்படும் அத்தியாயங்களுக்கு சிறு குறிப்பு எடுத்து அவற்றை மனப்பாடம் செய்தல்
9. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுத பழகல்
10. கேள்விகளுக்கு விடை அளிக்க முன் அறிவுறுத்தல்களை தெளிவாக வாசித்தல்
11. சரியான மனநிலையில் பரீட்சை எழுதல்
12. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்
13. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.